## இந்திரனின் “வாசக மைய விமர்சனம்” - -- குமரேசன்.
## அருள்.வே.நாஉரையாடல்

*********************************************************

தோழர் அகுமரேசன் மக்களை நேசிக்கும் மகத்தான . பத்திரிகையாளர், எழுத்தாளர் தொண்ணூறுகள் தொடங்கி . .என் கவிதை ஊற்றெடுக்க உற்சாகம் தந்து வருபவர் .பன்முக ஆளுமை கொண்டவர் திறந்த மனம் கொண்டு கலை இலக்கிய உலகில் பணியாற்றி வருபவர். கலை இலக்கிய விமர்சகர் இந்திரன் முன்வைக்கும் வாசக மைய விமர்சனக் கோட்பாட்டுக்குத் தன் கருத்தை உடனடியாகப் பதிவிட்டிருக்கிறார்.விவாதத்தையும் வரவேற்றிருக்கிறார் . எப்போதுமே விவாதத்தை வரவேற்பவரும், கலந்துகொள்பவருமாக இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத் தக்கதுதருவதும் பெறுவதுமாக இயங்கும் . .தாராள மனம் கொண்டவர்

அவரது பதிவும் எனது கருத்தும்

அ------ கு பதிவு.

1 //. வாசகர் தன் போக்கில் முடிவு செய்து கொள்ளட்டும் என்று விடுவது ஒருவகையில் படைப்பின் செய்தியைக் கொண்டுசேர்ப்பதில் படைப்பாளியின் தோல்வியே அல்லது பொறுப்பின்மையேபடைப்பின் செய்தியில் அல்லது . நோக்கத்தில் படைப்பாளிக்கு முழு விசுவாசம் இருக்குமானால் வாசகர் எப்படி வேண்டுமானாலும் //.ள்ளட்டும் என்று விட மாட்டார்புரிந்துகொ

எனது கருத்து ----

இந்தக் கூற்றில், ஒரு பிரதிக்கு படைப்பாளி கொடுக்கும் ஒற்றை அர்த்தம்தான் இருக்க வேண்டும் எனும் நம்பிக்கையின் வெளிப்பாடுஅதே நேரத்தில் வாசகன் மீது . .நம்பிக்கையற்ற தன்மையும் வெளிப்படுகிறது”வாசகனும்

படைப்பாளி அளவுக்கு புத்திசாலிதான்" என்று இந்திரன் பலமுறை குறிப்பிடுவார். ஷேக்ஸ்பியர் படைப்புகளைவிட அவை பற்றிய பிறரின் விமர்சனப் படைப்புகள் ஏராளம். திருக்குறளுக்கு எத்தனை விதமான உரைகள் வந்திருக்கின்றன. படைப்பாளியின் நோக்கம் நிறைவேறவேண்டும் என்றால் அவனது படைப்பு அவன் நினைத்தது மட்டும்தான் வாசகர்கள் எண்ண வேண்டும் என்றால் அரசியல், பண்பாட்டு, கால, இட, இத்யாதி இத்யாதி மாற்றங்களைக் கணக்கில் எடுக்கவே மாட்டோமா? அப்படியான பல்வேறு வாசக விமர்சனங்களைத் தவிர்த்துப் படைப்பாளி என்கிற ஒற்றைப் பரிமாணத்திலேயே பலியிட்டு விடுவோமா? அதனால்தான் சொல்கிறார்கள். "படைத்தவுடன் படைப்பாளி இறந்துவிடுகிறார்.".

அ------- கு பதிவு.

//2) படைப்பின் தனித்துவம் உணர்ந்து உள்வாங்கத் தக்கது, ஈடுபட்டுப் போற்றத்தக்கதுஆனால் படைப்பு என்பது . தனியாக இயங்குவது என்ற ஒளிவட்ட மிதப்பு மேலோங்குகிறபோது இப்படி வாசகருக்குச்"சுதந்திரம்" அளிக்கப்படுகிறதுஉண்மையில் இது வாசகரைப் . படைப்பாளியும், படைப்பாளியை வாசகரும் துண்டித்து விடுகிற செயல் என்றே எனக்குத் தோன்றுகிறது//.

எனது கருத்து ------

உண்மையில் இது படைப்பாளியின் தன்னகங்காரத்தைத் தகர்க்கிறதுபன்முகப் வாசகரின் படைப்பின் மீதான . படைப்பில் வாசகரின் .பார்வைக்கு இடமளிக்கிறது ஒரு வகையில் வாசகரை .பங்களிப்பைக் கோருகிறது இணையான தளத்தில்இருத்தி, படைப்பாளி – வாசகர் உறவினை வலுப்படுத்துகிறது.

அ----- பதிவு .கு.

//3) படைப்பின் நோக்கத்தை உள்வாங்கிக்கொண்ட வாசகர் அதைத் தனது அரசியல்பண்பாட்டுப் பார்வைகளோடு /சமூக/ அப்போது படைப்பு .பொருத்தி விரிவுபடுத்திக்கொள்வார் //.இன்னொரு தளத்திற்கு வருகிறது

எனது கருத்து -----

நானும் உடன்படுகிறேன். இந்நிலைமையை மேலும் ஸ்தூலமாக்குவதற்கு இந்த வாசக மைய விமர்சனம் உதவியாய் அமையும்.

அ----- பதிவு.கு.

//4) படைப்பின் அழகியல் சித்தரிப்புகளை வாசகர் தனது கோணத்தில் ரசிப்பதும், விளக்குவதும் வேறுஅதிலே கூட . படைப்பாளியின் மனதோடு வாசக மனமும் இணைந்துவிட்டால் அது மகத்தான வெற்றி//.

எனது கருத்து------

படைப்பாளியின் மனதோடு வாசக மனமும் இணைந்துவிட வேண்டும் என்கிற முன் நிபந்தனை எதற்கு? படைப்பின் அர்த்தம் வேறொரு பரிமாணம் கொண்டால்தான் தவறென்ன? ஒரு பிரதி பல அர்த்தங்களைக் கொடுப்பது கலையின் செழுமை அல்லவா?

அ----- கருத்து.கு.

//5) “என் வேலை படைப்பதோடு முடிந்துவிட்டது, வாசகர் எப்படி எடுத்துக்கொள்கிறார் என்று நான் கவலைப்படுவதில்லை” என்று சொல்கிற படைப்பாளிகள் உண்மையில் எந்த மாதிரியான வாசகர்களிடமிருந்து எப்படிப்பட்ட எதிர்வினை வருகிறது என்று பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்//.

எனது கருத்து----

உண்மைதான். படைப்பாளி வாசகரின் எதிர்வினைகளை எதிர்பார்க்கிறார்தான். இதற்குக் காரணமென்ன? அவரால் வாசகரைப் புறந்தள்ளிவிட முடியாது. மேலும் வாசகரின் நிலையை அறிவார்ந்த ஜனநாயக பூர்வமாக முன்வைக்கத்தான் இந்தக் கோட்பாடு பயன்படும்.

அ------ கருத்து.கு.

//6) "எழுத்தாளன்", "கலைஞன்" என்று ஆண்பாலாகச் சொல்வதற்கு மாறாக, "படைப்பாளி" என்ற பொதுச்சொல் புழக்கத்திற்கு வந்துகொண்டிருப்பது நல்ல மாற்றம்அதே . போல்"வாசகன்" என்று ஆண்பாலில் சொல்வதற்குப் பதிலாக, "வாசகர்" என்று பொதுப்பாலில் அடையாளப்படுத்துவதற்கு நாம் மாறலாமே?//

இந்தக் கருத்தை முழுதாக ஏற்கிறேன்.